# மெட்ரோ பயணியருக்கு 'ஸ்மார்ட் வாட்ச்' வசதி



**சென்னை, அக். 29–**

நிலையத்தில் காத்திருக்காமல், மெட்ரோ ரயிலில் விரைவாக பயணிக்க ஏதுவாக, நவீன கைக்கடிகாரம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

மெட்ரோ ரயிலில் பயணிக்க, 'டோக்கன், 'ஸ்மார்ட் கார்டு' வசதிகள் ஏற்கனவே உள்ளன. 'ஸ்மார்ட் கார்டு' வசதியில், தினம் மற்றும் மாதாந்திர கார்டு வசதியும் உள்ளன.

இத்துடன், நிலையத்தில், தானியங்கி டிக்கெட் இயந்திர சோதனைக்காக பயணி காத்திருக்காமல், விரைவாக செல்ல வசதியாக, நவீன தொழில்நுட்பத்தில், 'கைக்கடிகாரம்' தயாரித்து, பயணியர் பயன்பாட்டுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கடிகாரத்தில், நேரம் உட்பட, வழக்கமான செயல்பாடுகளுடன், பிரத்யேகமாக, 'சிப்' ஒன்று பொருத்தப்பட்டு, இதன் செயல்பாட்டில், ரயில் பயண கட்டணம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

இக்கடிகாரத்தை, கையில் கட்டியிருக்கும் பயணியர், நிலையங்களில் உள்ள தானியங்கி டிக்கெட் சோதனை இயந்திர வாயிலை கடந்து செல்லும்போது, கடிகாரத்தில் பொருத்தப்பட்டுள்ள, 'சிப்'பில், ஒருங்கிணைக்கப்பட்டுள்ள சிக்னல் தரவுகளால், டிக்கெட் சோதனை இயந்திரம் வழியாக, கட்டணம் பெறப்படும்.

இத்துடன், பயண விபரம், கட்டண இருப்பில் பாக்கி தொகை உட்பட, பயணியருக்கு தேவையான தகவல்களும், இவ்வசதியில், இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கடிகாரம், மெட்ரோ ரயில் நிறுவனத்துக்காக, பிரத்யேகமாக, 1,000 ரூபாயில் இருந்து, 1,500 ரூபாய் விலை மதிப்பில், தயாரிக்கப்பட உள்ளது.

மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

பயணி நிற்காமல், டிக்கெட் பரிசோதனை இயந்திரத்தை கடந்து செல்லும் வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டது.

நவீன கார்டு வசதிக்கு பதிலாக, நவீன கடிகார வசதி பயணியரை ஈர்க்கும் என்பதால், மெட்ரோ பயணியருக்காக, நவீன கடிகாரம் தயாரிக்கப்பட உள்ளது.

எட்டு மாதங்களில் இத்திட்டத்தை செயல்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, அதிகாரி கூறினார்.